தமிழ்நாடு அரசு

# நான்காம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

### தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© *SCERT 2019*

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

## முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



Tamil 4th-std_Term2.indd 3 8/7/2019 6:03:05 PM

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

---

# நாட்டுப்பண் - பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.


நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!






Tamil 4th-std_Term2.indd 4 8/7/2019 6:03:06 PM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



Tamil 4th-std_Term2.indd 5 8/7/2019 6:03:06 PM

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



Tamil 4th-std_Term2.indd 6 8/7/2019 6:03:06 PM

# தமிழ்

## நான்காம் வகுப்பு

### இரண்டாம் பருவம்

**தொகுதி 1**





Tamil 4th-std_Term2.indd 7 8/7/2019 6:03:07 PM

# முன்னுரை

**குழந்தைகள் சிறு பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!**


அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர்.
ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள்.
அச்சிப்பிக்குள் பொதிந்து கிடக்கும் திறனாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது, இதில் குழந்தைகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும் குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் **வாங்க பேசலாம்.**





குழந்தை வகுப்பறைச் சூழலைத்தாண்டிச் சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் **சிந்திக்கலாமா?**

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் **மொழியோடு விளையாடு.**






Tamil 4th-std_Term2.indd 8 8/7/2019 6:03:11 PM



ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை ஆகியவற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்**


திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**






மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோம்**

ஒற்றுமையுடன் சேர்ந்து செயல்பட உதவும் **இணைந்து செய்வோம்**




புதிய பாடநூலில் இவைபோன்ற பல புதிய செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

**பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்!**

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்திப் பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப் பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

QR GUIDE

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஒரு QR code Scanner பயன்படுத்தவும்.

மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும்
இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும்
ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த
சமூகம் அமையட்டும்

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.





Tamil 4th-std_Term2.indd 9 8/7/2019 6:03:13 PM

# பொருளடக்கம்


| வ எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | காவல்காரர் | 1 |
| 2. | எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்! | 7 |
| 3. | யானைக்கும் பானைக்கும் சரி | 17 |
| 4. | நன்னெறி | 21 |
| 5. | பனிமலைப் பயணம் | 24 |
| 6. | ஆராய்ந்திட வேண்டும் | 30 |
| 7. | திருக்குறள் கதைகள் | 38 |
| 8. | பசுவுக்குக் கிடைத்த நீதி | 46 |
| 9. | வேலைக்கேற்ற கூலி | 53 |
| | அகரமுதலி | 60 |


AFHRS2

மின்னூல்

VU2DYI

மதிப்பீடு

B321_4_TAMIL_LANG

இணைய வளங்கள்

# 1 காவல்காரர்

சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்

காக்கை குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு

காற்று பலமாய் அடித்த தாலே
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ

இதனைக் கண்ட காகம் ஒன்று
இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே என்று கருதி

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு வெள்ளைச் சட்டை
கட்டிக் கொள்ள சரிகை வேட்டி





Tamil 4th-std_Term2.indd 1 8/7/2019 6:03:16 PM



எடுத்து வந்து காவல் காரர்
   இருக்கும் இடத்தில் போட்டு விட்டே
உடுத்திக் கொள்வீர் என்று சொல்லி
   ஒதுங்கி நின்று பார்த்த தங்கே

காவல் காரர் பழைய உடையைக்
   கழற்றிக் கீழே போட வில்லை
ஆவ லோடு புதிய உடையை
   அணிய வில்லை அசைய வில்லை

உடனே காகம் அருகில் சென்றே
   உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்
அடடே இந்தக் காவல் காரர்
   யாரோ என்று நினைத்தி ருந்தேன்

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
   வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக் கணத்தே நண்பர் அறிய
   எடுத்துச் சொல்வேன் என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
   காலை வைத்து நின்று கொண்டு
கூவி அழைத்துப் பறவை யாவும்
   கூடச் செய்து விட்ட தங்கே

– அழ. வள்ளியப்பா

ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன்



Tamil 4th-std_Term2.indd 2 8/7/2019 6:03:17 PM

## பொருள் அறிவோம்

தோட்டத்தின் நடுவில் நின்றிருந்த சோளக்கொல்லைப் பொம்மையைக் காவல்காக்கும் உயிருள்ள மனிதர் என்று காகம் நினைக்கிறது. கனத்த மழையால் ஆடைகள் கிழிந்து நிற்கும் அந்தப் பொம்மையிடம், புதிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டுகிறது. ஆனால், அஃது அணிந்து கொள்ளாததால், உயிரற்ற பொருள் என்பதை உணர்ந்து கொள்கிறது. அதனால், அச்சமின்றி மற்ற பறவைகளையும் கூவி அழைக்கிறது.

## நூல் குறிப்பு

'மலரும் உள்ளம்' என்னும் நூலின் இரண்டாம் தொகுதியில் இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் அழ. வள்ளியப்பா. இவர் குழந்தைகளுக்கான கதைகளையும் பாடல்களையும் மிகுதியாகப் பாடியுள்ளமையால், குழந்தைக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.



## வாங்க பேசலாம்

- கதைப்பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலின் பொருளைப் புரிந்துகொண்டு பாடுக.
- பாடல் பொருளை உமது சொந்த நடையில் கூறுக




சூழல் 1

மீனாவின் அம்மா மீனாவுக்கு மட்டுமின்றி மீனாவின் நண்பர்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவிக்கிறார்.

சூழல் 2

வளவனின் அப்பா யார் எந்த உதவி கேட்டாலும் நீ செய்யக் கூடாது என்று கூறுகிறார்.

இதுபற்றி உங்கள் கருத்து என்ன?



Tamil 4th-std_Term2.indd 3 8/7/2019 6:03:18 PM

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பெயரில்லாத' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

அ) பெயர் + இலாத  ஆ) பெயர்+ இல்லாத

இ) பெயரில் + இல்லாத  ஈ) பெயரே + இல்லாத

02 வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் ........................................

அ) கீழே  ஆ) அருகில்

இ) தொலைவில்  ஈ) வளைவில்

03 'சோளக்கொல்லைப் பொம்மை' என்பது ........................................

அ) உயிருள்ள பொருள்  ஆ) உயிரற்ற பொருள்

இ) இயற்கையானது  ஈ) மனிதன் செய்ய இயலாதது

04 அசைய+ இல்லை– இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ........................................

அ) அசைய இல்லை  ஆ) அசைவில்லை

இ) அசையவில்லை  ஈ) அசையில்லை

05 நித்தம் – இச்சொல்லுக்குரிய பொருள் ........................................

அ) நாளும்  ஆ) இப்பொழுதும்

இ) நேற்றும்  ஈ) எப்பொழுதும்

E9PP1N

### வினாக்களுக்கு விடையளிக்க.

01 தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் யார்?

02 காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?

03 பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது யார்?


04 காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் ஏன் அணியவில்லை?

## முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.

சட்டை ______ சரிகை ______ ______ ______

______ ______ ______ ______

## மேகங்களுக்குப் பொருத்தமான மழைத்துளிகளை இணைக்க.




**இணைத்த சொற்களைக் கீழே எழுதுக.**

1. சரிகை வேட்டி
2. ______
3. ______
4. ______
5. ______

## பாடலைத் தொடர்ந்து பாடுவோமா?

மக்கள் ஒன்று கூடியே
மகிழ விரும்பும் திருவிழா
குழந்தைச் செல்வம் யாவுமே
கூடிஆடும் திருவிழா

______
______
______
______

## உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

நமக்குப் பயன்தரும் பல மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.



**வினாக்கள்**

1. வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?
2. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?
3. வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.
4. வாழையிலை – இச்சொல்லைப் பிரித்து எழுதுக.
5. பலவகை – இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.



## செயல் திட்டம்

**உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலிருந்து கீழ்க்காணும் செய்திகளைத்திரட்டுக.**

1. தோட்டத்தின் பெயர்
2. உரிமையாளர் பெயர்
3. தோட்டம் அமைந்திருக்கும் ஊர்
4. நீர்வசதி கிணறு அடிகுழாய் ஆறு/குளம்
5. தோட்டத்தில் விளையும் காய்கறி / பழம் பெயரைக் குறிப்பிடுக.
6. தோட்டம் பற்றிய உனது கருத்து நன்றாக உள்ளது/ ஓரளவு / வளர்ச்சிதேவை

## அறிந்து கொள்வோம்


1. தோட்டத்தில் பூச்சித் தாக்குதலைத் தடுக்க முட்டை ஓட்டுத் தூளுடன், சிறிது உப்பைக் கலந்து செடியைச் சுற்றிலும் வளையம் போட வேண்டும்.
2. வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைகொல்லிகள் தாவரங்களின் கனிம வளங்களைக் குறைக்கின்றன.
3. மண் அரிப்பைத் தடுக்க மரங்கள் நட்டு வளர்த்தல் இன்றியமையாதது.



Tamil 4th-std_Term2.indd 6 8/7/2019 6:03:19 PM

# 2 எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்!

மாமரத்திலிருந்த கிளிகள் கீச் கீச் எனக் குரலெழுப்பி அங்கும் இங்கும் பறந்துகொண்டிருந்தன. அருகிலிருந்த வைக்கோல்போரின் மீது சேவலொன்று மெதுவாக நடைபயின்றுகொண்டிருந்தது. தோட்டத்தில்துள்ளிக்குதித்துக்கொண்டிருந்த கன்றைக் கண்டு, பசு ம்மா. . . எனக் குரலெழுப்பியது. இவற்றையெல்லாம் தன் வீட்டின் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இளமாறன், தன் தாத்தாவைத் தேடிக் கீழே இறங்கிவந்தான். தாத்தாவைக் காணாததால், அவர் விடியற்காலையிலேயே வயலுக்குச் சென்றிருப்பார் என எண்ணினான்.




அப்போது, "இளமாறா... இங்கே வாப்பா" என்று அம்மாவின் குரல் சமையலறையிலிருந்து ஒலித்தது. "இதோ வர்றேம்மா" என்றவாறே இளமாறன் வீட்டிற்குள் விரைந்து ஓடினான்.

"தாத்தாவிற்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு வாப்பா..."என்று கூறிய அம்மாவிடம், "சரிம்மா" என்ற இளமாறன், அம்மாவிடமிருந்து உணவைப் பெற்றுக்கொண்டு வயலை நோக்கிச் சென்றான்.

வயலுக்குச் செல்லும் வழியில் பூத்திருந்த அழகிய பூக்கள் அவனைப் பார்த்துச் சிரிப்பதைப் போலிருந்தன. தன் கைகளால் அவற்றை மெல்ல வருடியபடியே சென்றான் இளமாறன். அந்தப் பூந்தோட்டத்தைத் தாண்டியதும், அடக்கத்துடன் தலைசாய்த்துக் கற்றறிந்த சான்றோர் போலக் குனிந்து நிற்கும் நெல்மணிகளைக் கண்டான். வயல்வரப்பைத் தாண்டாமல் தேங்கி நிற்கும் நீரைக் கண்டு மகிழ்ந்தான்.



கால்வாயில் பள்ளம் பார்த்துப் பாய்ந்தோடும் தண்ணீரில் தன் கால்களை நனைத்தும் கைகளால் அலைந்தும் விளையாடினான். அப்போது எழுந்த ஒலியைக் கேட்டு, அருகிலிருந்த வளையிலிருந்து நண்டுகள் எட்டிப் பார்த்தன. அவை தம் கொடுக்குகளை மேலும்கீழுமாக அசைத்து நகர்ந்ததைப் பார்த்து வியப்படைந்தான்.

சற்றுத் தொலைவில்,தாத்தா வயலில் தனியாக வேலைபார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். "தாத்தா.... தாத்தா..." என்றழைத்தவாறே அவரருகில் சென்றான். தாத்தாவை அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

இளமாறனின் குரல் கேட்டதும், தாத்தா திரும்பிப் பார்த்தார். "பார்த்து வாப்பா..." என்று சொல்லிக் கொண்டே அவனருகே சென்றார் தாத்தா. ஓடிவந்து தன்னைக் கட்டிக்கொண்ட பேரனை உச்சிமோந்து தூக்கி மகிழ்ந்தார். அவன் கொண்டு வந்த உணவைப் பெற்றுக் கொண்டார்.



அருகிலிருந்த வேப்பமரத்தின் நிழலில் தாத்தாவும் பேரனும் அமர்ந்தனர். தாத்தா, தன் கையாலேயே பேரனுக்கு உணவூட்டி மகிழ்ந்தார். உணவைச் சாப்பிட்டுக் கொண்டே இளமாறன் அவரிடம் பேசத் தொடங்கினான்.

"தாத்தா, நீங்க ஏன் இவ்வளவு வயதாகியும் நிலத்தில வேலை செஞ்சு துன்பப்படறீங்க?"

"செல்லக்குட்டி, எனக்கு அவ்வளவு வயசா ஆயிடுச்சு! இங்க பாருப்பா, இந்த வயல்லே வேலை செஞ்சுதான் என் உடம்பு இன்னும் வலிமையா இருக்கு. நான் இதுவரைக்கும் நோய்நொடின்னு படுத்தது இல்லே. கண்ணு, இந்த வயலுதான் நமக்குச் சொத்து. இந்த மண்ணுல விளையற பயிர்கள்தாம் நம்மை வாழவைக்குது. நாம உண்ணுகின்ற உணவுப் பொருள்களெல்லாம் என்னைப் போல உழவர்களின் உழைப்பின் மூலமாகக் கிடைக்கிறதுதான்.

நெல், கம்பு, கேழ்வரகு, உளுந்து, துவரம்பருப்பு, எண்ணெய் வித்துகள், காய்கள், பழங்கள் இன்னும் நிறைய சொல்லிக்கிட்டே போகலாம். அத்தனையும் விளைவிப்பது நாங்கதான். அதனால, இந்த நிலத்தைத்தான் நாம தெய்வமா வணங்கணும் செல்லக்குட்டி. இந்த நிலத்தை ஒருநாளு பார்க்கலேன்னாலும் எனக்குத் தூக்கமே வராதுப்பா. அதுமட்டுமா? இந்த நிலத்தில விளையற விளைச்சலெல்லாம் நமக்கு மட்டும் பயன்படுதுன்னு நினைக்கிறியா? அதுதான் இல்லே, நம்ம தேவைக்குப் போக விளைந்ததைப் பிறருக்கும் கொடுக்கும்போது கிடைக்கிற மகிழ்ச்சி இருக்கு பாரு, அதுக்கு ஈடுஇணையே இல்லேப்பா.

ஆமா, தாத்தா. சரியாத்தான் சொல்றீங்க. உழவர்கள்தாம் உலகத்துக்கே அச்சாணின்னு எங்க ஆசிரியர்கூடச் சொன்னாரு.



Tamil 4th-std_Term2.indd 9 8/7/2019 6:03:21 PM

தாத்தாவிடம் பேசிக்கொண்டே அருகிலிருந்த வெண்டைச்செடியிலிருந்து ஒரு வெண்டைக்காயைப் பறித்தான் இளமாறன். "இன்னும்கூட இரண்டு, மூணு பறிச்சுச் சாப்பிடுப்பா, பச்சையா சாப்பிட்டா உடம்புக்கு நல்லதுதான்" என்றார் தாத்தா.

தாத்தா, வெண்டைக்காய் சுவையாக இருக்கிறதே என்ற பேரனிடம், ஆமாம்பா. இயற்கை உரம் போட்டுத்தான் இங்க எல்லா உணவுப் பயிரையும் விளைவிக்கிறோம். அதனால, உடலுக்கும் கெடுதி இல்லே, உணவுப்பொருளும் சுவையா இருக்கும்" என்று கூறிய தாத்தாவின் கண்கள் சற்றே கலங்கியதுபோல் உணர்ந்தான் இளமாறன். "தாத்தா…தாத்தா.. என்னாச்சு? ஏன் என்னவோ போல் இருக்கிறீங்க?" "ஒண்ணுமில்லேப்பா" என்ற தாத்தா, உண்மையாகவே தம் கண்களைத் துடைத்துத்தான் கொண்டார்.

தாத்தா, நீங்க எங்கிட்டே எதையோ சொல்ல வேண்டான்னு நினைக்கிறீங்க, அப்படித்தானே, சொல்லுங்க தாத்தா" என்றான் இளமாறன்.

"இம்..ம்.. அப்போதெல்லாம் நிறைய மாடுகள் இருக்கும். அவற்றின் சாணத்தை ஒன்று சேர்த்து, எருவாக்கி, நிலத்தில் போட்டு, இயற்கையா உழவு செய்தோம். தாவரங்களோட தழைகளை மண்ணிலிட்டு மட்கச் செய்து நல்ல விளைச்சல் கண்டோம். இப்படி விளையற உணவுப்பொருளைச் சாப்பிடுறவங்க நல்ல உடல்நலத்தோடும் நோய் எதிர்ப்புச்சக்தியோடும் இருந்தாங்க. ஆனால், இப்ப எல்லாம் இயற்கை உரத்தையே பார்க்க முடியலே.

தாத்தா, நம்ம மாமா வீட்டிலே மூட்டை மூட்டையா அடுக்கியிருக்கே. அவையெல்லாம் இயற்கை உரமில்லையா?

இல்லப்பா. அவையெல்லாம் செயற்கை உரம். அவற்றை மண்ணில் போட்டு மண்ணைக் கெடுக்கிறோம் என்ற வருத்தம் எனக்கும் இருக்கு. செயற்கை உரங்களைத் தெளித்து உழவனுக்கு உதவியா இருக்கிற தேனீ, வண்ணத்துப்பூச்சி, மண்புழுன்னு எல்லாத்தையும் அழிச்சி, மண்ணைக் கெடுக்கிறோம்".

தாத்தா, செயற்கை உரங்களால நிலத்துக்கு அவ்வளவு கெடுதலா?

இம்.. செயற்கை உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் உணவுப்பொருளை உண்பதால் நமக்கு நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து நோய்கள் வருகின்றன. உணவுகள் உயிர்ச்சத்துகள் இல்லாத சக்கைகளாகவும் மாறிப்போகின்றன. உடலை வாட்டும் நோயான சர்க்கரை நோய், வயது வித்தியாசம் இல்லாமல் சிறுபிள்ளைகளுக்கும் வருகிறது.

தாத்தா, அப்ப தண்ணீர் மட்டும்தான் சுத்தமா இருக்குதுன்னு சொல்லுங்க!

அட,போப்பா! செயற்கை உரம், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை மண்ணில் தெளித்துத் தண்ணீர் விடுகிறோம். அந்தத் தண்ணீர், நிலத்தடி நீருடன் கலந்து அதையும் கெடுத்துவிடுகிறதே. இதுபோதாது என்று தொழிற்சாலைக் கழிவுகளை அப்படியே நிலத்தில்விட்டு, நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறோமே".

அடப்பாவமே! அப்படின்னா, நாம எதைத்தான் சாப்பிடுவது?



Tamil 4th-std_Term2.indd 10 8/7/2019 6:03:21 PM

பழைய முறைப்படி நாம இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, வேளாண்மை செய்யணும்பா. அப்போதுதான் நாம் மட்டுமல்ல, எல்லாருமே நலமா இருப்பாங்க!

"தாத்தா, நீங்க சொன்னதை நான் நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன். உழவுதான் நமக்கு உயிர். அதில விளையற பயிர்கள்தாம் நம்ம எல்லாருக்கும் உணவா இருக்கு. அதனால, நம்ம உயிர் காக்கும் உணவுப்பொருளை விளைவிக்கிற இந்த நிலத்துக்கு நாம எந்தக் கெடுதலும் செய்யக்கூடாது. முடிஞ்சவரைக்கும் செயற்கை உரத்தைவிட்டுட்டு, இயற்கை உரத்தைத்தான் பயன்படுத்தணும். சரியா, தாத்தா. அப்பாக்கிட்டே மட்டுமின்றி, என் நண்பர்களுக்கும் நீங்க சொன்னதைக் கட்டாயம் எடுத்துச் சொல்வேன்".

"நல்லது, கண்ணு. அப்படியே செய். எல்லாருக்கும் நன்மையைத் தர்ற ஒரு செய்தியைச் சொன்னா, யாரும் ஏத்துக்கொள்ளாமலா போவாங்க? மெதுவாப் புரிஞ்சுக்குவாங்க. சரி, கண்ணு, உச்சி வெயிலு வர்றதுக்குள்ளே நீ வீடுபோய்ச் சேருப்பா".

தாத்தாவிடம் விடை பெற்று ஆழ்ந்த சிந்தனையோடு வீடு திரும்பினான் இளமாறன். வீட்டிற்குள் நுழைந்ததும் யாரிடமும் பேசாமல் அமைதியாகத் தன் அறைக்குச் சென்றான். அப்போது அங்கு வந்த அவனுடைய அப்பா, "இளமாறா, என்னாச்சு? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? ஓ, வயலுக்குப் போயிட்டு வந்தியா? இந்த வெயிலு உனக்கு ஒத்துக்கலையோ? உங்க தாத்தாகூட நான் சொல்றதை எங்க கேட்கிறாரு? இந்தத் தள்ளாத வயசில எதுக்கு வயல்ல போய் வேலை செய்யணும்? வீட்ல இருக்கலாம்ல" என்று கூறிய அப்பாவை முறைத்த இளமாறன், "அதுசரிப்பா, நீங்க நினைக்கிறமாதிரி யாருமே வயல்வேலைக்குப் போகலன்னா என்னாகும்? எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்...! நாம என்ன பணத்தையா சாப்பிடமுடியும்?" என்றான்.

இளமாறனின் பேச்சில் வெளிப்பட்ட உண்மை, தம்மைச் சுடுவதுபோல் உணர்ந்த அப்பா, ஒன்றும் பேசாமல் வயலை நோக்கி நடந்தார்.

## வாங்க பேசலாம்



- "பணத்தையா சாப்பிடமுடியும்?" என்ற இளமாறனுக்கு நீங்களாக இருந்தால் என்ன விடை சொல்வீர்கள்?



## சிந்திக்கலாமா?

நம் நாட்டில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. உழவுத்தொழில் செய்ய யாரும் விரும்பவில்லையெனில், உலகம் என்னவாகும்?



Tamil 4th-std_Term2.indd 11 8/7/2019 6:03:21 PM

# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பாய்ந்தோடும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

அ) பாய் + தோடும் ஆ) பாய்ந்து + ஓடும்

இ) பயந்து + ஓடும் ஈ) பாய் + ஓடும்

02 காலை + பொழுது – இச்சொற்களைச் சேர்த்து எழுதினால் கிடைப்பது ........................................

அ) காலைப்பொழுது ஆ) காலைபொழுது

இ) காலபொழுது ஈ) காலப்பொழுது

03 பின்வருவனவற்றுள் எது இயற்கை இல்லை?.........................................

அ) மலை ஆ) காடு

இ) நெகிழி ஈ) நிலம்

PGGZLW

04 குனிந்து– இச்சொல் குறிக்கும் பொருள்..........................................

அ) வியந்து ஆ) விரைந்து

இ) துணிந்து ஈ) வளைந்து

05 தன்+ உடைய இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .........................................

அ) தன்னுடைய ஆ) தன்உடைய

இ) தன்னூடைய ஈ) தன்உடையை

## வினாக்களுக்கு விடையளிக்க

01 செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

02 நிலத்தைத் தெய்வமாக வணங்கவேண்டும் எனத் தாத்தா கூறக் காரணம் என்ன?

03 'எல்லாரும் இப்படியே இருந்துவிட்டால்' என இளமாறன் ஏன் கூறினான்?

## சொந்த நடையில் கூறுக

உமக்குப் பிடித்த காய்கள், பழங்கள் எவை? ஏன்?



Tamil 4th-std_Term2.indd 12 8/7/2019 6:03:21 PM

## அகரமுதலி பார்த்துப் பொருளறிக.

மாசு ---------   வேளாண்மை ---------

## சொற்களை இணைத்துத் தொடரை நீட்டித்து எழுதுக.

எடுத்துக்காட்டு :

| படித்தேன் | வரைந்தாள் |
|---|---|
| நான் படித்தேன் | ___________ |
| நான் நேற்று படித்தேன் | ________________ |
| நான் நேற்று பாடம் படித்தேன் | ____________________ |
| நான் நேற்று தமிழ்ப்பாடம் படித்தேன் | ______________________ |

## நிறுத்தக் குறியிடுக

01 நெல் கம்பு கேழ்வரகு போன்றவை தானியங்கள்

02 வெண்டைக்காய் உடலுக்கு நல்லது

03 ஆகா பயிர் அழகாக உள்ளதே

04 அடப்பாவமே அப்படின்னா நாம எதைத்தான் சாப்பிடுவது

## புதிய சொற்களை உருவாக்கலாமா?

| | | | |
|---|---|---|---|
| ல் | ப | ஓ | பல், ஊர், |
| பா | நா | க | |
| று | ஊ | டு | |
| ர் | ற் | ள் | |
| வா | ய் | ம் | |
| கா | த | ண் | |
| ஏ | லை | க | |



Tamil 4th-std_Term2.indd 13 8/7/2019 6:03:21 PM

## படத்தைப் பார்த்து விடுகதைகள் உருவாக்குக.

1 

2  

## அகர வரிசைப்படுத்துக

தேன், தாளம், தௌவை, துடுப்பு, தென்னை, தையல், தோழமை, தீ, தூய்மை, தொகை, திட்பம், தளிர்






Tamil 4th-std_Term2.indd 14 8/7/2019 6:03:23 PM

## சொல்லக்கேட்டு எழுதுக

1. இயற்கை வேளாண்மை
2. உயிர்ச்சத்துகள்
3. செயற்கை உரங்கள்
4. நெல் மணிகள்
5. நண்டுகள்

## கலையும் கைவண்ணமும்

வண்ணம் தீட்டுவோமா!



## செயல்திட்டம்



உங்கள் வீட்டில் உருவாகும் காய்கறிக்கழிவுகளையும் மட்கும் குப்பைகளையும் பயன்படுத்தி, இயற்கை உரம் தயார் செய்க. அந்த உரத்தை வீட்டிலோ பள்ளியிலோ உள்ள தாவரங்களுக்குப் பயன்படுத்துக.



Tamil 4th-std_Term2.indd 15 8/7/2019 6:03:23 PM


## குழுவாக விளையாடலாமா?

☞ படத்தில் உள்ளதுபோல் அட்டைகளைத் தயார் செய்து கொள்க.


☞ முதல் அட்டையை அசையாமல் இருக்குமாறு வைத்துக்கொள்க.

☞ இரண்டாவது அட்டை மட்டும் சுழலுவதற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். மேல் பக்கமாகக் கடிகார முள் போன்று செய்துவைத்துக் கொள்க.

☞ மாணவர் ஒருவரை அழைத்து, முதல் அட்டையிலிருந்து ஏதாவது ஒரு படத்தின் பெயரைக் கூறச் சொல்லவேண்டும். அந்த மாணவரையே இரண்டாவது அட்டையையும் சுழற்றச் சொல்ல வேண்டும். கடிகார முள்ளிற்கு நேராக முதல் அட்டையில் கூறிய படத்திற்குப் பொருத்தமான படம் வந்தால் அவர் வெற்றி பெற்றதாகவும், இல்லையெனில் அடுத்தடுத்த சுற்றுக்கு வாய்ப்பு வழங்கியும் விளையாட்டைத் தொடரலாம்.




## அறிந்து கொள்வோம்



**திருக்குறள்**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

– உழவு, குறள் 1033





Tamil 4th-std_Term2.indd 16 8/7/2019 6:03:24 PM

# 3 யானைக்கும் பானைக்கும் சரி

மரியாதை இராமன் விசித்திரமான வழக்கொன்றை ஒருமுறை எதிர்கொள்ள நேர்ந்தது. உழவர் ஒருவரின் மீது, அரபு வணிகர் ஒருவர் தொடுத்த வழக்குத்தான் அது.

அரபு வணிகர், மரியாதை இராமனிடம் "ஐயா, இந்த உழவர் தம் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக என் யானையை இரவல் கேட்டார். நானும் கொடுத்தேன். ஊர்வலத்தின்போது, யானை இறந்துவிட்டது. அந்த யானையைத் திருப்பித் தரச் சொல்லுங்கள்" என்று கூறினார்.




உழவரோ, "ஐயா, அந்த யானை ஊர்வலத்தில் தற்செயலாக இறந்துபோய்விட்டது. அதற்குரிய விலையையாவது, மாற்றாக வேறு யானையையாவது வாங்கித் தருகிறேன் என்று எத்தனையோ முறை கூறிவிட்டேன். ஆனால், இந்த வணிகர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இறந்துபோன அதே யானைதான் வேண்டுமென அடம்பிடித்தால் நான் என்ன செய்வேன்?" என்று வருத்தத்துடன் கூறினார்.



Tamil 4th-std_Term2.indd 17 8/7/2019 6:03:25 PM

உழவர் கூறியதிலிருந்து உண்மையை உணர்ந்துகொண்ட மரியாதை இராமன், இருவரையும் பார்த்து, "நீங்கள் இருவரும் நாளை நீதிமன்றத்துக்கு வாருங்கள்" என்று கூறி அனுப்பினார். பின்னர், உழவரை மட்டும் தனியே அழைத்து, நாளை நீங்களாகவே நீதிமன்றத்திற்கு வரவேண்டா. உங்களை அழைத்து வருவதற்கு அந்த வணிகரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறேன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். அவர் வரும்போது, உங்கள் வீட்டுக் கதவிற்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திருங்கள். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லி அனுப்பினார்.



உழவரும் மரியாதை இராமன் கூறியதைப்போலவே வீட்டின் கதவுக்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்தார். அவரை அழைத்து வருவதற்காக வந்த வணிகர், ஆத்திரத்துடன் அவர் வீட்டுக் கதவைத் தட்ட, கதவு வேகமாகத் திறந்துகொள்ள, கதவின் பின்னால் அடுக்கி வைத்திருந்த பானைகள் ஒவ்வொன்றாகக் கீழே விழுந்து உடைந்து நொறுங்கின. அப்போது, வீட்டுக்குள்ளிருந்து வந்த உழவர், "வணிகரே, என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? எங்கள் வீட்டில் காலங்காலமாகப் போற்றி வைத்திருந்த பழம்பானைகள் இவை. இவற்றையெல்லாம் உடைத்துவிட்டீரே, உம்மைச் சும்மா விடப்போவதில்லை. எனக்கு இதே பானைகளைத் திருப்பித் தாருங்கள்" என்று கூக்குரலிட்டார். செய்வதறியாது திகைத்தார் வணிகர். இருவரும் நீதிமன்றத்திற்குச் சென்றனர்.



உழவரின் வீட்டில் நடந்ததைக் கூறினார் வணிகர். அதனைக் கேட்ட மரியாதை இராமன், "ஐயா, வணிகரே! நீரோ இறந்துபோன உம்முடைய அருமையான யானையை உயிருடன் திருப்பித் தரவேண்டும் என்கிறீர். உழவரோ, உடைந்துபோன தம் பழைய பானைகளைத் திருப்பித் தரவேண்டும் என்கிறார். ஆதலால், நீங்கள் உடைத்த பானைகளைத் திருப்பித் தந்துவிட்டால், உழவரும் இறந்துபோன உம்முடைய யானையைத் திருப்பித் தந்துவிடுவார்" எனத் தீர்ப்பு அளித்தார். அவர் கூறியதைக் கேட்ட வணிகர், "ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். என்னால் பழைய பானைகளைத் தரமுடியாது" என்றார். உடனே, மரியாதைராமன், "ஐயா, வணிகரே, உம்மாலேயே திருப்பித் தரமுடியாது என்றால் உழவரால் மட்டும் எப்படித் திருப்பித் தரமுடியும்? ஆதலால், யானைக்கும் பானைக்கும் சரியாகப் போய்விட்டது" என்று தீர்ப்பளித்தார்.

**நீதி: ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு**




Tamil 4th-std_Term2.indd 18 8/7/2019 6:03:25 PM



## வாங்க பேசலாம்

- யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதையை உம் சொந்தநடையில் கூறுக.




உன் நண்பன் உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு உன்மீது சினம் கொண்டால் நீ என்ன செய்வாய்?

## வினாக்களுக்கு விடையளிக்க.

4H7CF4

01 உழவர் யானையை எதற்காக இரவல் கேட்டார்?


02 ஊர்வலம் சென்ற யானைக்கு என்ன நேர்ந்தது?

03 மரியாதை இராமன் உழவரைத் தனியே அழைத்து என்ன கூறினார்?

04 யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?

## பூக்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வணிகர் _________________ நாட்டைச் சேர்ந்தவர்
2. உழவர், வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் _______________
3. திருமண ஊர்வலத்தில் _________________ இறந்து விட்டது.
4. பழைய _________________ கீழே விழுந்து நொறுங்கின.




## சொல்லிப் பழகுவோம்

1. பட்டம் விட்ட பட்டாபி, பெட்டிக் கடையில் பொட்டலம் போட்டான்
2. கன்று மென்று தின்றது
3. வாழைப்பழத் தோலால் வழுக்கி விழுந்தான்

## சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரமைத்து எழுதுக.




1. ___________________________ 2. ___________________________

3. ___________________________ 4. ___________________________

## குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை உருவாக்குக. பொருத்தமான தலைப்பிடுக.

நான்கு எருதுகள் – ஒற்றுமையாக வாழ்தல் – சிங்கம் – பிரிக்க நினைத்தல் – எருதுகள் எதிர்த்தல் – சிங்கத்தின் சூழ்ச்சி – எருதுகள் பிரிதல் – சிங்கம் வேட்டையாடுதல்.

## குறிப்புகளைக் கொண்டு கட்டத்திலிருந்து விடை காண்போமா?

| | | | |
|---|---|---|---|
| | 1 | | |
| 4 | | 3 | |
| | 2 | | |
| | | | |
| | | | |

**இடமிருந்து வலம்**

1. பழைமை என்பது இதன் பொருள்
2. வீட்டின் முகப்பில் உள்ளது.
3. தும்பிக்கை உள்ள விலங்கு

**மேலிருந்து கீழ்**

2 உடலின் ஓர் உறுப்பு
4 வேளாண் தொழில் செய்பவர்

## செயல் திட்டம்



வார இதழ்கள், செய்தித்தாள்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கும் யானை பற்றிய செய்திகளைத் தொகுத்து, செய்தித் தொகுப்பு உருவாக்குக.

# 4 நன்னெறி

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே – பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்

– சிவப்பிரகாச சுவாமிகள்



### சொல் பொருள்

இன்சொல் – இனிமையான சொல், இருநீர் வியனுலகம் – கடலால் சூழப்பட்ட பரந்த உலகம், வன்சொல் – கடுமையான சொல், அதிர்வளை – ஒலிக்கின்ற வளையல், அழல் கதிர் – கதிரவனின் வெப்பக் கதிர்கள், தண்ணென் கதிர் – குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி

### பாடல் பொருள்

பொன்னாலான ஒலிக்கும் வளையல்களை அணிந்த பெண்ணே, கடலானது கதிரவனின் வெப்பத்தைக் கண்டு பொங்காது. குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி கண்டுதான் பொங்கும். அதுபோலக் கடலால் சூழப்பட்ட இப்பெரிய உலகில் வாழும் மக்கள் இன்சொற்களைக் கேட்டு மகிழ்வார்களே அன்றி, வன்சொற்களைக் கேட்டு மகிழ மாட்டார்கள் என்பதைப் புரிந்து செயல்படுக.

### நூல் குறிப்பு

நீதிநூல்களுள் ஒன்று நன்னெறி. இந்நூலைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றினார். நாற்பது நேரிசை வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வோர் உவமைமூலம், ஒவ்வொரு நீதிக்கருத்தை விளக்குவது, இந்நூலின் சிறப்பாகும்.



Tamil 4th-std_Term2.indd 21 8/7/2019 6:03:28 PM



## வாங்க பேசலாம்

- பாடலை உரிய ஒலிப்புடன் படித்து மகிழ்க.
- உன்னிடம் பிறர் எப்படிப் பேச வேண்டும் என எண்ணுகிறாய்? ஏன்?




இன்சொற்களைப் பேசுவதால் நன்மையே விளையும் என்பதைப் பிறருக்கு எப்படி உணர்த்தலாம்?

TAF1TV

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'இன்சொல்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................

| | | | |
|---|---|---|---|
| அ) | இன்+ சொல் | ஆ) | இனிமை + சொல் |
| இ) | இன்மை + சொல் | ஈ) | இனிய+ சொல் |

02 "அதிர்கின்ற வளை" – இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள் ........................

| | | | |
|---|---|---|---|
| அ) | உடைகின்ற | ஆ) | ஒலிக்கின்ற |
| இ) | ஒளிர்கின்ற | ஈ) | வளைகின்ற |

03 வியனுலகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது..............................................

| | | | |
|---|---|---|---|
| அ) | வியன் + உலகம் | ஆ) | வியல் + உலகம் |
| இ) | விய + உலகம் | ஈ) | வியன் + னுலகம் |

### வினாக்களுக்கு விடையளிக்க

01 உலகம் எப்போது மகிழும்? – நன்னெறிப் பாடல்மூலம் உணர்த்துக.

02 கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?

### பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. இன்சொல் | – | கதிரவனின் ஒளி |
| 2. வன்சொல் | – | நிலவின் ஒளி |
| 3. அழல்கதிர் | – | கடுஞ்சொல் |
| 4. தண்ணென் கதிர் | – | இனிய சொல் |

## குறிப்புகளைக் கொண்டு கட்டத்தை நிரப்புக


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நமது தாய்நாட்டின் திருப்பெயர் | ● | | | |
| 2 | அரசனின் வேறு பெயர் | | ● | | |
| 3 | உடைமையை இப்படியும் சொல்லலாம். | ● | | | |
| 4 | மணத்திற்குப் பெயர் பெற்ற பூ இது | | ● | | |

வட்டத்தில் எழுதிய எழுத்துகளைக் கீழே உள்ள கட்டத்தில் எழுதுக

இப்படிப் பேசினால் எல்லாருக்கும் பிடிக்கும்


| | | | |
|---|---|---|---|
| ● | ● | ● | ● |

## சிறு வட்டத்தில் உள்ள எழுத்தை முதலாகக் கொண்டு சொல் உருவாக்குக




1. குடை
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10


## அறிந்து கொள்வோம்



**திருக்குறள்**

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

–இனியவை கூறல், குறள் 100



## செயல்திட்டம்



இனியவை கூறல் என்னும் திருக்குறள் அதிகாரத்திலுள்ள குறட்பாக்களை எழுதி வருக.



Tamil 4th-std_Term2.indd 23 8/7/2019 6:03:29 PM

# 5 பனிமலைப் பயணம்

WP4426
















அனைவரும் ஒரு படகில் புறப்பட்டனர்





திடீரென்று ஆற்றில் நீரின் வேகம் அதிகரித்தது படகு ஒரு பக்கமாய்ச் சாய்கிறது.




அவர்களை ஒரு முதலை பார்த்தது





என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள் உங்களைக் கரையில் விடுகிறேன்
ஐயா, முதலையாரே… உங்கள் எண்ணம் எனக்குத் தெரியும் முதுகில் ஏற்றி எங்களைச் சாப்பிட நினைக்கிறீர்கள்.
ஆகா! நல்ல விருந்து… இன்றைக்கு ஒரு பிடி பிடிச்சிட வேண்டியதுதான்.
கவனமாகக் கேளுங்கள். இப்படித்தான் ஒரு முதலை கடந்த வாரம், எங்களைப் போன்ற விலங்குகளை அடித்துச் சாப்பிட்டது.
அப்புறம் என்னவாயிற்று?
பிறகென்ன செரிமானம் ஆகாமல் இறந்தே போய்விட்டது. அதற்குத் தயார் என்றால் நீங்கள் தாராளமாக எங்களைச் சாப்பிடுங்கள்
உங்களைத் தின்றால் நான் இறந்து விடுவேனா?
ம்… அதைப்பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது பசிக்கிறது. இதோ சாப்பிடப் போகிறேன்.
முதலையாரே… இன்னுமொரு பிரச்சனையும் உள்ளது
என்ன அது… சீக்கிரம் சொல்
வழியில் பாம்பு கடித்தால் எங்களுக்கு விஷம் ஏறாமல் இருக்க நாங்கள் விஷ முறிவுச் செடிகளைத் தின்று வந்திருக்கிறோம். அதனால் எங்களை யார் கடித்தாலும் அல்லது நாங்கள் யாரைக் கடித்தாலும் அவர்கள் இறப்பது உறுதி.






















## வாங்க பேசலாம்

- உமது நண்பரிடம் உமக்குப் பிடித்த, பிடிக்காத பண்புகளைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.



### சிந்திக்கலாமா?

பக்கத்து ஊருக்குச் செல்ல படகிலும் செல்லலாம்., பேருந்திலும் செல்லலாம்....எதில் பயணம் செய்ய நீ விரும்புவாய், காரணம் என்ன?



Tamil 4th-std_Term2.indd 26 8/7/2019 6:03:34 PM

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 பனிமலைக்காட்டிற்கு <u>விரைவாகச்</u> சென்றுவிட முடியாது. அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் எது?

அ) மெதுவாக ஆ) எளிதாக

இ) கடினமாக ஈ) வேகமாக

I3MQ8M

02 என்ன+ என்று இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) என்னஎன்று ஆ) என்னென்று

இ) என்னவென்று ஈ) என்னவ்வென்று

03 "அக்காட்டில்" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) அந்த + காட்டில் ஆ) அ + காட்டில்

இ) அக் + காட்டில் ஈ) அந்தக் + காட்டில்

04 "என்னவாயிற்று" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) என்ன + ஆயிற்று ஆ) என்னவா + ஆயிற்று

இ) என்ன + வாயிற்று ஈ) என்னவோ + ஆயிற்று


### வினாக்களுக்கு விடையளிக்க.

01 படகில் செல்லும்போது, விலங்குகள் ஏன் திடீரென அலறின?

02 நரி, முதலையிடம் என்ன கூறியது?

03 இக்கதையில் உனக்குப் பிடித்த விலங்கு எது? ஏன்?

### உரிய பெட்டியுடன் பாராசூட்டை இணைப்போமா?



## விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிப் புதிய சொற்றொடர்கள் உருவாக்குக.

01 _______________ நண்பன் = நல்ல நண்பன்

02 _______________ தூரம் = ______________________

03 _______________ மான் = ______________________

04 _______________ பயணம் = ______________________

05 _______________ காடு = ______________________

06 _______________ குதிரை = ______________________

## மொழியோடு விளையாடு

கட்டத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக. உருவாக்கிய ஒவ்வொரு சொல்லையும் கீழே எழுதி, விண்மீனுக்கு வண்ணம் தீட்டுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரை | தி | கு | க் | ரி | வ |
| அ | த் | தை | ப | இ | லை |
| ப | ட | கு | த் | து | த |
| ய் | நா | ஓ | ம | று | மு |
| வா | ச | பா | ம் | பு | சி |

★ குதிரை ______ ☆ ______ ☆ ______

☆ ______ ☆ ______ ☆ ______

☆ ______ ☆ ______ ☆ ______

☆ ______ ☆ ______ ☆ ______

நான் பெற்ற மொத்த விண்மீன்கள் ______________________

## சொல்லக் கேட்டு எழுதுக

1. அடர்ந்த காடு
2. பயணம்
3. பனிமலைக்காடு
4. விலங்குகள்
5. திருவிழா




Tamil 4th-std_Term2.indd 28 8/7/2019 6:03:35 PM

## அகரவரிசைப் படுத்துக.


மகிழ்ச்சியாய்த் தாவத் தொடங்கு, மௌவல் என்னும் அழகிய மலரைச் சென்றடைவாய்

மைதானம், முறுக்கு, மோப்பம், மகிழ்ச்சி, மௌவல், மாதம், மொழி, மீன், மேகம், மெத்தை, மிளகு, மூட்டை



## கலையும் கைவண்ணமும்

**காகிதப் பூ செய்வோமா!**



## செயல் திட்டம்



"அறிவே துணை" என்னும் நீதியை அறிவுறுத்தக்கூடிய கதைகளுள் இரண்டு எழுதி வருக.

# 6 ஆராய்ந்திட வேண்டும்

7VVEME



'அடடே! வா, மாணிக்கம். என்ன, இன்றைக்குக் காலையிலேயே வந்து விட்டாயே… !!"

"ஆமாம், தாத்தா! நேற்று நீங்கள் சொன்ன கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால்தான் வேறு கதை கேட்கும் ஆவலில் காலையிலேயே வந்துவிட்டேன்."

" சரி, மாணிக்கம் இன்று அருமையான கதையொன்று சொல்கிறேன் கேள்.

மன்னர் ஒருவர் தம் குதிரையில் ஏறி அமர்ந்தபடி, ஒரு கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். கிராமங்களின் முன்னேற்றத்தையும், மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டி, மன்னர் தமது குதிரையில் பயணம் மேற்கொண்டிருந்தார்.

மன்னரைப் போலவே அவரது குதிரையும் இரக்கக் குணம் கொண்டதாகக் காணப்பட்டது.

அக்குதிரையானது சுற்றும் முற்றும் பார்த்தபடியே மன்னரைச் சுமந்துகொண்டு வந்து கொண்டிருந்தது.





Tamil 4th-std_Term2.indd 30 8/7/2019 6:03:35 PM


அப்போது, நாய் ஒன்று காலில் அடிபட்ட காரணத்தால் நடக்க முடியாமல் நொண்டி, நொண்டி சென்று கொண்டிருப்பதைக் குதிரை பார்த்தது. உடனே அந்த நாய்க்கு உதவி செய்திட வேண்டுமென்று மனத்தில் நினைத்தது.

அதனால், தன் கனைப்பொலியின் மூலம் மன்னரை அழைத்தது குதிரை. "அரசே, அதோ ஒரு நாயானது நடக்க முடியாமல் தத்தித் தத்திச் சென்று கொண்டிருக்கின்றது. அந்த நாயை என் முதுகில் ஏற்றிக்கொண்டு, அது எங்குச் செல்லவேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா?" என்று கேட்டது.

"குதிரையே! என்னைப் போலவே நீயும் இரக்கத்துடன் செயல்படுகிறாய்! அந்த நாய்க்கு உதவுவதில் உனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியைப் போன்றே எனக்கும் இருக்கின்றது" என்றார் மன்னர். உடனே தம் பின்னால் வந்துகொண்டிருந்த காவலர்களிடம் அந்த நாயைத் தூக்கித் தாம் அமர்ந்திருக்கும் இடத்தின் முன்னே வைத்திடுமாறு கூறினார்.

காவலர்களும் அந்த நாயைக் குதிரையின்மீது ஏற்றி மன்னர் முன்னே அமர வைத்தனர்.

மன்னர் முன்னே அமர்ந்து குதிரைச்சவாரி செய்து கொண்டிருந்த அந்த நாயானது, மிகவும் மகிழ்ச்சியடைந்தது.



குதிரையின் மீது மன்னர் வருவதைக் கண்ட கிராமத்து மக்களெல்லாம் அவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தார்கள். அதனைக் கவனித்த நாயோ இந்த மக்களெல்லாம் என்னைப் பார்த்துத்தான் வணங்குகின்றார்கள். என் அருகில் இருக்கும் மன்னர், என்னைச் சுமந்துகொண்டிருக்கும் குதிரை இவர்களைவிடவும் நானே சிறந்தவனாகவும், உயர்ந்தவனாகவும் இருக்கின்றேன். இந்த மக்கள் எல்லாம் என்னை வணங்குகின்ற காட்சியைப் பார்க்கின்றபோது எனக்கு அளவுக்கு மீறிய உற்சாகம் வருகின்றதே! என்ற மகிழ்ச்சியில் தன்னையே மறந்தது அந்த நாய். மறு நிமிடம் அது தன் தலையைத் தூக்கியபடி 'லொள்', 'லொள்' என்று குரைத்தது.

நாயின் செயலைக் குதிரை கவனித்தது. "நாயே! அமைதியாக இருந்துகொள்! நீ குரைத்துக் கொண்டே வந்தால், எல்லாரும் உன்மீது வெறுப்படைவார்கள். அதன் பின்னர், நீ என்மீது சவாரி செய்யமுடியாது" என்றது குதிரை.

"குதிரையே! இந்தக் கிராமத்து மக்கள் என்னை வணங்குகின்ற காட்சியைப் பார்த்ததும் உனக்கு என்மீது பொறாமை ஏற்பட்டுவிட்டது. அதனால்தான், நீ என்னை மட்டம் தட்டுகிறாய்" என்றது நாய்.

"நாயே ! குடிமக்கள் எல்லாம் உன்னைப் பார்த்து வணங்கவில்லை. அவர்கள் மன்னரைப் பார்த்து வணங்குகிறார்கள். மன்னர் முன்னே இருக்கின்ற நீ, அதையெல்லாம்பார்த்துவிட்டு உனக்குக்கிடைத்தமரியாதையாக நினைத்துக்கொண்டு உற்சாகமடைந்துவிட்டாய். இனிமேலாவது உண்மை நிலையை உணர்ந்து அமைதியாக இரு" என்றது குதிரை.

"குதிரையே! உனக்கு என்மீது கொண்டுள்ள பொறாமையானது நன்றாக முற்றிவிட்டது. அதனால்தான் எனக்கொரு போலியான விளக்கத்தைக் கொடுக்கின்றாய்! இந்த விளக்கத்தைக் கேட்க நான் தயாராக இல்லை! " என்றபடி மேலும் சத்தமாகக் குரைத்தது அந்த நாய்.

மன்னரின் அருகில் வந்துகொண்டிருந்த காவலர்கள் அந்த நாயைக் கீழே இறக்கிவிட்டு அடித்து விரட்டினார்கள். அங்கிருந்து நொண்டியபடியே ஓடிய நாய், சற்றுத் தொலைவில்போய் நின்றுகொண்டு திரும்பிப் பார்த்தது.

தான் இல்லாதபோதும், குடிமக்கள் எல்லாரும் மன்னரை வணங்க, மன்னரும் அவர்களுக்குப் பதில் வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்த நாய்க்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. தன்னுடைய தவற்றினை நினைத்து வருந்தியது. நாம் ஆராயாமல் முடிவெடுத்தோம். அதனால்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது எண்ணியது.

"ஆராய்ந்திடாமல் முடிவெடுத்தால் என்ன நடக்கும் என்பதை இக்கதைமூலம் புரிந்துகொண்டாயா, மாணிக்கம்?" என்றார் தாத்தா. "ஓ! நன்றாகப் புரிந்துகொண்டேன்" என்றான் மாணிக்கம்.

என்ன, குழந்தைகளே! இனி, நாம் எந்த ஒரு செயலைச் செய்தாலும் ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டும். சரிதானே!



Tamil 4th-std_Term2.indd 32 8/7/2019 6:03:36 PM



## வாங்க பேசலாம்

- கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- ஆராய்ந்து செயல்படுவதால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுக.



### சிந்திக்கலாமா?

நீ செய்யாத செயலுக்கு உனக்கு ஒருவர் நன்றி கூறினால் அல்லது பரிசு அளித்தால் அவ்வேளையில் நீ என்ன செய்வாய்?

LHBSFX

## வினாக்களுக்கு விடையளிக்க

01 குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?

02 காவலர்கள், குதிரைமீது இருந்த நாயை ஏன் கீழே இறக்கிவிட்டனர்?

## சொல்லக் கேட்டு எழுதுக.

குதிரை, இரக்கம், நிலைமை, பேராசை, குடிமக்கள்

## நிறுத்தக் குறியிடுக

அரசே அதோ ஒரு நாயானது நடக்க முடியாமல் தத்தித்தத்திச் சென்று கொண்டிருக்கிறது. அந்த நாயை என் முதுகில் ஏற்றிக்கொண்டு அது எங்கு செல்ல வேண்டுமோ அந்த இடத்தில் விட்டுவிடலாமா என்று கேட்டது

**ஒரே சொல் இரண்டுமுறை அடுத்தடுத்து வருமாறு சொற்றொடர் அமைத்து எழுதுக**
(எ.கா.) நாய் ஒன்று நொண்டி, நொண்டி நடந்தது

தத்தித் தத்தி ______________

எழுதி எழுதி ______________

திரும்பித் திரும்பி ______________

குனிந்து குனிந்து ______________



Tamil 4th-std_Term2.indd 33 8/7/2019 6:03:36 PM

## குறிப்பைப் படி! விடையைக் கொடு!

பேச உதவுவது வாய்
படுக்க விரிப்பது பாய்
கனிக்கு முந்தையது காய்
காவல் காப்பது…………..?

வரியில் ஒன்று சுங்கம்
கனிமத்தில் ஒன்று தங்கம்
நாடுகளுள் ஒன்று வங்கம்
தமிழுக்கு மூன்று……….?

உழவுக்கு உதவுவது ஏர்
ஊர்கூடி இழுப்பது தேர்
மரத்திற்கு தேவை வேர்
நல்லதை உன்னிடம்……?

## அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக

போலி, பொறாமை, சவாரி, வருந்தியது, மரியாதை

## சொற்களிலுள்ள பிழைகளை நீக்குக.


மண்ணர், குதிறைச் சவாரி, உர்சாகம், சிறந்தவண், மக்கலெள்ளாம், கனைப்பொளி, இறக்கக் குணம், கிராமங்கல்.

## கலையும் கைவண்ணமும்

பயன்படுத்திய காகிதத்தில், உறை தயாரிக்கலாமா?

### தேவையான பொருள்கள்

பயன்படுத்திய தாள்கள், பசை





Tamil 4th-std_Term2.indd 34 8/7/2019 6:03:36 PM

## விலங்குகளுக்குரிய ஒலிப்புகளை வட்டமிடுக.







| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ல | க | க | னை | க் | கு | ம் | ன | ர |
| வ | ழ | மு | ழ | ங் | கு | ம் | அ | ம் |
| ந | டை | னை | வி | ழு | ம் | தி | ப | று |
| கு | ரை | க் | கு | ம் | சை | றா | மு | ளி |
| ம | று | கு | ரு | வி | லு | கே | ள் | பி |
| டு | ன | ம் | மு | று | உ | உ | டை | ழ |





## அறிந்துகொள்வோம்.

**தமிழில் மூவினம்**

த– வல்லினம்

மி– மெல்லினம்

ழ்– இடையினம்

**தமிழும் மூன்றும்**

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| முச்சங்கம் | – | முதல், இடை, கடை |
| முக்காலம் | – | இறப்பு, நிகழ்வு, எதிர்வு |
| முப்பொருள் | – | அறம், பொருள், இன்பம் |
| மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை |



## செயல்திட்டம்

பிறர் பாராட்டுவதற்குரிய நல்ல செயல்கள் எவையெவை என உன் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு எழுதி வருக.



Tamil 4th-std_Term2.indd 35 8/7/2019 6:03:37 PM

# முக்காலம் அறிவோமா?







| நடந்து கொண்டிருக்கும் செயல் | நடந்துமுடிந்த செயல் | நடக்கப்போகும் செயல் |
|---|---|---|
| நிகழ்காலம் | இறந்தகாலம் | எதிர்காலம் |

**கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல் எழுதுக.**

எடுத்துக்காட்டு

நான் உணவு ------------(உண்) – நான் உணவு உண்டேன் (இறந்தகாலம்)

நான் உணவு உண்கிறேன் (நிகழ்காலம்)

நான் உணவு உண்பேன் (எதிர்காலம்)

| வ.எண் | தொடர் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1 | இளவரசி பூ -------- (தொடு) | | | |
| 2 | ஆடு புல் ----------- (மேய்) | | | |
| 3 | நாங்கள் படம்------- (வரை) | | | |
| 4 | கதிர் போட்டியில்---- (வெல்) | | | |
| 5 | மயில்கள் நடனம் ---- (ஆடு) | | | |



Tamil 4th-std_Term2.indd 36 8/7/2019 6:03:37 PM

## அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக.

| வ.எண் | வினைச்சொல் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1 | செய் | | செய்கின்றான் | |
| 2 | | பறந்தது | | |
| 3 | | | | படிப்பான் |
| 4 | கேள் | கேட்டது | | |
| 5 | | | | சொல்வார்கள் |

## படங்களுக்குப் பொருத்தமான காலங்களைப் பயன்படுத்தித் தொடர் எழுதுக.



கண்ணன் ஏணியில் ஏறுகிறான்



________________



________________



________________





________________



________________



________________



________________



________________

# 7 திருக்குறள் கதைகள்

## பொறுமையும் பொறுப்பும்


BAJGUP

தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர், புகழ்பெற்ற அறிவியலறிஞர். இவர், பல முறை தோல்வி கண்டு, பெரும் முயற்சிக்குப் பின்னரே மின் விளக்கைக் கண்டுபிடித்தார்.

நண்பர்களுக்கும், மற்ற அறிவியலறிஞர்களுக்கும் தம் கண்டுபிடிப்பைச் செய்துகாட்ட எடிசன் விரும்பினார். அதற்காக, நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்து, அனைவரையும் வரவழைத்தார். அவரது ஆய்வகத்தின் மேல்தளத்தில் இதற்கான கூட்டம் நடைபெற்றது.

எடிசன் தம் உதவியாளரை அழைத்து மின் விளக்கை மேல் தளத்திற்குக் கொண்டு வரச்சொன்னார். உதவியாளர், அதனைக் கொண்டு வரும்போது, திடீரெனக் கைதவறி விழுந்தது. ஆயினும், சற்றும் மனம் கலங்காத எடிசன், உடனே மற்றொரு மின் விளக்கை உருவாக்கினார். அதனை மீண்டும் அதே உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்து வரச் செய்தார்.

"மின் விளக்கைக் கீழே போட்டு உடைத்தவரிடம் மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே?" என்று சிலர் எடிசனிடம் கேட்டனர். அதற்கு எடிசன், "உடைந்த பொருளை மீண்டும் உருவாக்க என்னால் முடிந்தது. ஆனால், உதவியாளரின் மனத்தைக் காயப்படுத்திவிட்டால் அதை என்னால் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? அதுமட்டுமன்று, மீண்டும் அதே பணியை அவரிடமே கொடுக்கும்போது, தமது பொறுப்பை உணர்ந்து கவனமுடன் பணிபுரிவார். அதனால்தான் அப்படிச் செய்தேன்" என்றார்.



எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்த பொறுமைக் குணத்தை, அப்போதுதான் மற்றவர்கள் முழுமையாக உணர்ந்து கொண்டனர்.

### குறள்

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை

போற்றி ஒழுகப் படும்.

பொறையுடைமை, குறள்.154

### விளக்கம்

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும்.



Tamil 4th-std_Term2.indd 38 8/7/2019 6:03:37 PM

## மெய்ப்பொருள் காண்போம்

மாட்டுவண்டி ஒன்றில், தேங்காய்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தார் ஒருவர். வழியில், குறுக்குப்பாதை ஒன்று வந்தது. அங்கே சிறுவன் ஒருவன் நின்றிருந்தான்.

"தம்பி, இந்தச் சாலையில் போனால் ஊர் வருமா?" என்று கேட்டார் வண்டிக்காரர். "ஓ, வருமே" என்றான் சிறுவன்.

"போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"

"மெதுவாகச் சென்றால் பத்து நிமிடத்தில் போய்விடலாம்".

"வேகமாகச் சென்றால்.. . .."

"அரை மணி நேரம் ஆகும்".

சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டுக் குதிரை வண்டிக்காரருக்குக் கோபம். "என்ன கிண்டலா? வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும்?" என்று கேட்டார்.

"போய்த்தான் பாருங்களேன்" என்று சிறுவன் சொன்னதும், அவர் வண்டியை வேகமாக விரட்டிச் சென்றார்.



சிறிது தூரம் போனதுமே சாலையில் அங்கங்கே கற்கள் நிறைந்து இருந்தன. அதனால், வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது. தேங்காய்கள் சிதறின. வண்டியைத் தூக்கி நிறுத்திக் கீழே சிதறிய தேங்காய்களை ஒவ்வொன்றாக எடுத்துப் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. வண்டிக்காரருக்குச் சிறுவன் சொன்னதன் பொருள் புரிந்தது.

## குறள்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு.

அறிவுடைமை, குறள். 423

## விளக்கம்

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும், கேட்டவாறே எடுத்துக்கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.



Tamil 4th-std_Term2.indd 39 8/7/2019 6:03:38 PM

## குற்றமும் குறையும்

கதிரவனிடம் வேண்டாத குணமொன்று இருந்தது. அதாவது, எப்போது பார்த்தாலும் யாரைப் பற்றியாவது எதைப்பற்றியாவது குறை சொல்லிக் கொண்டேயிருப்பான். அதனால், அவனைப் பார்த்தாலே போதும். எல்லா நண்பர்களும் ஓடத் தொடங்கிவிடுவர்.

தமிழ் அழகன் ஒருவன்தான் இப்போது அவனுடன் பேசுகிறான். வேறு எவரும் பேசுவதில்லை. அன்று, தமிழ் அழகன் நான்கு நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான் கதிரவன். ஆர்வத்துடன் அவர்கள் அருகில் வந்தான்.

கதிரவனைப் பார்த்ததும் எல்லாரும் ஒதுங்கிச் செல்ல, தமிழ் அழகன் மட்டுமே தனியாக நின்றான். கதிரவனின் முகம் வாடியது.

"என்ன கதிர்? ஏன், என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டான் தமிழ் அழகன்.

"ஆமாம் தமிழ் . என்னைப் பார்த்தாலே எல்லாரும் ஓடிப்போறாங்களே ....." என்றான் கதிரவன்.

"எல்லாம் யாரால? உன்னாலதானே!" என்றான் தமிழ் அழகன் .

"நான் என்ன தப்பு பண்ணினேன்? பிறர்கிட்ட உள்ள குற்றம் குறையைத்தானே பேசினேன்" என்றான் கதிரவன்.



"கதிர், குற்றம்குறை யார்கிட்டேதான் இல்லை. உன்னோட குறை என்னன்னு உனக்குத் தெரியுமா? நீ பிறரைப் புறம் பேசறதுதான் உன்னோட குறை. உன்னோட நாக்கை அடக்கு. எல்லாரும் உன்கிட்ட பேசுவாங்க"என்றான் தமிழ் அழகன் .

கதிரவன் தன்னைத் திருத்திக் கொண்டான். எல்லாரும் அவனுடன் மெள்ள மெள்ளப் பேசத் தொடங்கினர்.

### குறள்

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

அடக்கமுடைமை, குறள்.127

### விளக்கம்

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால், சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.



Tamil 4th-std_Term2.indd 40 8/7/2019 6:03:38 PM

அழகு

கந்தனின் உருவமே, "கோபம் கோபம் கோபம்" என்றாகிப் போனது. கந்தனை யாராவது விசாரித்தால், "எப்பவும் கோபத்தோடே 'உர்' ருன்னு அலைவானே அவனைத்தானே கேட்கிறீங்க" என்று மாணவர்கள் எளிதாகச் சொல்லிவிடுவர். அதனால், அவனிடம் நெருங்கிப் பழகவும் மாணவர்கள் பயந்தனர்.

கந்தன் ஒருநாள் அவன் நண்பனான நன்மாறனிடம் பேசிக் கொண்டிருந்தான். "நீயெல்லாம் சும்மா ஜம்முனு அழகா இருக்கியே! நான் மட்டும் ஏன் முகமெல்லாம் கறுத்துப்போய் இப்படி இருக்கேன்" என்றான்.

நன்மாறன் சிரித்தான். "நீ தினமும் உன்னோட முகத்தைக் கண்ணாடியில் பார்க்கிறியா?" என்று கேட்டான்.

"தினமும் பார்க்கிறேன்"

"இன்னும் உனக்குக் காரணம் புரியலையா?"

"புரியலை"

"கந்தா, நெருப்பில் வாடிய பூக்கள் தம்மோட அழகை எல்லாம் இழக்கும், அதுபோலத்தான் உன்கிட்ட மாறாம இருக்கிற கோபத்தால உன் முகம் அழகையெல்லாம் இழந்திருக்கு. பொடி வைத்தாற்போல் சொன்னான் நன்மாறன்.



நன்மாறன் சொன்னதில் உண்மை இருக்கவே, தன் கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தத் தொடங்கினான் கந்தன். ஒரு மாத காலம் கடுமையான விரதம்போல் காத்தான். அன்று கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அஃது எத்துணை அழகாக இருந்தது தெரியுமா?

குறள்

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

வெகுளாமை, குறள். 305

விளக்கம்

ஒருவன் தன்னைத் தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக்கொள்ளாவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.



Tamil 4th-std_Term2.indd 41 8/7/2019 6:03:39 PM



## வாங்க பேசலாம்

- நாவைக் காக்காவிட்டால் ஏற்படும் துன்பம் குறித்துப் பேசுக.
- கதையில் ஒன்றைத் தெரிவு செய்து நண்பர்களுடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.



### சிந்திக்கலாமா?

அனுவும், பானுவும் சாலையைக் கடக்க, நின்று கொண்டு இருந்தனர். அப்போது மஞ்சள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அனு சாலையைக் கடக்கத் தொடங்கினாள். பானு, பச்சை விளக்கு ஒளிர்ந்தால் மட்டுமே கடக்க வேண்டும். பொறுமையாக இரு என்றாள். எது சரியான செயல்?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

BPTFUD

### சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

01 'பொறை' என்பதன் பொருள் ..................

அ) முழுமை　　ஆ) வளமை
இ) பொறுமை　　ஈ) பெருமை

02 நிறையுடைமை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

அ) நிறை + யுடைமை　　ஆ) நிறை + உடைமை
இ) நிறைய + உடைமை　　ஈ) நிறையும் + உடைமை

03 'மெய் + பொருள்' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

அ) மெய்பொருள்　　ஆ) மெய்யானபொருள்
இ) மெய்ப்பொருள்　　ஈ) மெய்யாய்ப்பொருள்

04 வெகுளாமை – இச்சொல்லின் பொருள் ..................

அ) அன்பு இல்லாமை　　ஆ) பொறாமை கொள்ளாமை
இ) சினம் கொள்ளாமை　　ஈ) பொறுமை இல்லாமை

05 போற்றி ஒழுகப்படும் பண்பு ..................

அ) சினம்　　ஆ) பொறையுடைமை
இ) அடக்கமில்லாமை　　ஈ) அறிவில்லாமை



Tamil 4th-std_Term2.indd 42　8/7/2019 6:03:39 PM

## வினாவிற்கு விடையளிக்க

01 பொறையுடைமை எப்போது போற்றப்படும்?

02 மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?

03 நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?

04 சினம் எப்போது ஒருவரை அழிக்கும்?

05 நீங்கள் படித்த திருக்குறள் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?

## பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பொறை | – | சொல்குற்றம் |
| 2. மெய்ப்பொருள் | – | துன்பப்படுவர் |
| 3. காவாக்கால் | – | பொறுமை |
| 4. சோகாப்பர் | – | காக்காவிட்டால் |
| 5. சொல்லிழுக்கு | – | உண்மைப்பொருள் |

## பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தொடரை நிரப்புக.

01 ஆய்வகம் _______________ இருந்தது. (மேல் தளத்தில் / மேல் தலத்தில்)

02 வழியில் _______________ ஒன்று வந்தது. (குருக்குப்பாதை / குறுக்குப்பாதை)

03 உனக்குக் காரணம் _______________ ( புறியவில்லையா / புரியவில்லையா)

04 எடிசன் மின் _______________ உருவாக்கினார். (விளக்கு / விலக்கு)

05 குற்றம் _____ யாரிடம்தான் இல்லை. (குரை / குறை)



Tamil 4th-std_Term2.indd 43 8/7/2019 6:03:39 PM

## சொல்லக் கேட்டு எழுதுக.

01 மெய்ப்பொருள்

02 பொறையுடைமை

03 சோகாப்பர்

04 நிறையுடைமை

# மொழியோடு விளையாடு

**பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக.**

01 உன்னுடைய ஊரின் பெயர் _______________?

02 உனக்குப் பிடித்த வண்ணம் _______________?

03 நீ பள்ளிக்கு _______________ வருகிறாய்?

04 உன்னுடைய நண்பன் _______________?

05 கோடை விடுமுறைக்கு _______________ சென்றாய்?

06 மெய்ப்பொருள் என்பதன் பொருள் _______________?

07 குறில் எழுத்துகள் _______________?

08 சாருமதி _______________ வீட்டிற்குச் சென்றாள்?

யாது
யாவை
எங்கு
எது
எப்படி
என்ன
யார்
யாருடைய

**நமக்குத் தேவையான பண்புகளைத் தேர்ந்தெடுப்போமா?**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ன் | பு | ம் | வ | க |
| ட | பொ | வு | ன | சை | ல் |
| க் | ஈ | றி | சி | பொ | லா |
| க | கை | அ | வா | ய் | மை |
| ம் | க | க் | மு | ஒ | ரு |
| செ | ய் | ந் | ந | ன் | றி |

1. அன்பு 2. ______ 3. ____ 4. ______ 5. ______ 6. ______ 7. ____


## கலையும் கைவண்ணமும்

### சூரியகாந்திக்கு வண்ணமிடுவோமா?


இதழ்களுக்கு மஞ்சள் தூள், விதைகளுக்கு உலர்ந்த தேயிலைத்தூள்… பயன்படுத்தி அழகாக்குக.



## அறிந்து கொள்வோம்



1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
2. திருக்குறள் அகர எழுத்தில் தொடங்கி னகர எழுத்தில் முடிகிறது.
3. திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் அனிச்சம், குவளை.



## செயல்திட்டம்



நீங்கள் நன்கு அறிந்த திருக்குறளுக்கு உம் சொந்த நடையில் கதை எழுதி வருக.



Tamil 4th-std_Term2.indd 45 8/7/2019 6:03:39 PM

# 8 பசுவுக்குக் கிடைத்த நீதி

(நாடகம்)

**முன்கதைச் சுருக்கம்**

சோழ மன்னர்களுள் ஒருவன் மனுநீதி. முறைமை தவறாது ஆட்சி புரிவதையே தன் நோக்கமாகக் கொண்டவன். ஆயினும், அவன் ஆட்சிக்காலத்தில் வாயில்லாப் பசுவுக்கு ஏற்பட்டது ஒரு பேரிழப்பு. அதற்குக் காரணமானவன் வேறுயாருமல்லன், அரசனின் மகனே. இப்போது, அரசன் என்ன செய்வான்? தன் மகன் என்று அவனைக் காப்பாற்றுவானா? அல்லது தன் கன்றை இழந்து வாடும் அந்தப் பசுவுக்கு உரிய நீதியை வழங்குவானா?

வாருங்கள் தெரிந்துகொள்ள அரங்கத்துக்குள் நுழைவோம்.

**காட்சி – 1**

**இடம்** : அரசவை மண்டபம்

**காலம்** : நண்பகல்


**உறுப்பினர்கள்** : அரசர் மனுநீதிச் சோழர், அமைச்சர் பெருமக்கள்

(அவையில் மன்னரும் அமைச்சர் பெருமக்களும் வீற்றிருக்கின்றனர். அப்போது அங்கு வந்த தச்சர் ஒருவர், மன்னரை வணங்கிப் பணிகிறார். இனி....)

**அரசர்** : வாருங்கள், தச்சரே. நேற்று உம்மிடம் ஒரு வேலையைக் கொடுத்தேனே, முடித்துவிட்டீரா?

**தச்சர்** : ஓ, முடித்துவிட்டேன் மன்னா. நீங்கள் நேரிலேயே வந்து பார்வையிடலாம் மன்னா.

**அரசர்** : அப்படியா? மிக்க மகிழ்ச்சி. அமைச்சர் பெருமக்களே, 'சோழ நாடு சோறுடைத்து' என்பது உலகோர் அறிந்த செய்தி. அதுமட்டுமா? நம் சோழர் குலத்துக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு செய்தி, நீதி தவறாத ஆட்சிமுறை அல்லவா? அதனால்தான், என் ஆட்சியில் குடிமக்கள் யாரும் துன்பப்படக் கூடாது என்று நினைத்தேன். அதற்காக நான் ஏற்படுத்திய





Tamil 4th-std_Term2.indd 46 8/7/2019 6:03:40 PM

ஓர் அமைப்பே ஆராய்ச்சிமணி. அதைத்தான் இந்தத் தச்சர் சிறப்பாகச் செய்து முடித்துள்ளார்.

**அமைச்சர்** : ஆராய்ச்சி மணியா? அது எதற்கு மன்னா? அதைக்கொண்டு நீங்கள் எப்படி நீதி வழங்குவீர்கள்?

**அரசர்** : சொல்கிறேன், அமைச்சரே. நம் அரண்மனை வாயிலிலே கோவில் மணிபோல் பெரியதொரு மணியைக் கட்டச் செய்துள்ளேன். குடிமக்கள், தங்களுக்கு ஏற்படும் குறைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள இந்த ஆராய்ச்சிமணியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**அமைச்சர்** : அரசே, இதிலென்ன புதுமை? நீங்கள்தாம் எந்தக் குறையும் மக்களுக்கு வைப்பதில்லையே.

**அரசர்** : நீங்கள் சொல்வது உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால், தங்கள் குறைகளை வெளிப்படையாகச் சொல்வதற்குச் சிலர் தயங்கலாம் அல்லவா? மேலும், இந்த ஆராய்ச்சிமணியின் நோக்கமே, உடனுக்குடன் நீதி வழங்குவதில்தான் உள்ளது. அதுமட்டுமா? குடிமக்கள் எப்போது ஆராய்ச்சிமணியை ஒலித்தாலும், அவர்கள் முன் நானே ஓடோடிச் சென்று நிற்பேன். அவர்களின் மனக்குறையையும் உடனடியாகத் தீர்த்துவைப்பேன்.





Tamil 4th-std_Term2.indd 47 8/7/2019 6:03:40 PM

**அமைச்சர்கள்** : ஆஹா, நீங்கள்தாம் சிறந்த மன்னர். இந்நிலவுலகம் உள்ளவரை உங்கள் புகழ் ஓங்கும்.

(அரசவை கலைகிறது. சில மாதங்களாக ஆராய்ச்சிமணியின் ஓசையை அரசர் கேட்கவேயில்லை. இந்நிலையில் ஒருநாள் வழக்கம்போல் அமைச்சர்கள் சூழ மன்னர் அமர்ந்திருக்கிறார். அப்போது, ஆராய்ச்சிமணி ஒலிக்கத் தொடங்குகிறது. இனி....)

## காட்சி – 2

**இடம்** : அரசவை

**காலம்** : மாலை

**உறுப்பினர்கள்** : அரசர், அமைச்சர் பெருமக்கள், அரண்மனைக் காவலாளி

**காவலாளி** : மன்னா.....மன்னா.....

(என்றழைத்தவாறே பதற்றத்துடன் ஓடி வருகிறான், அரண்மனைக் காவலாளி.)

**அரசர்** : என்ன ஆயிற்று? ஏன் இப்படி மூச்சிரைக்க ஓடிவருகிறாய்? பதறாமல் சொல்.

**காவலாளி** : மன்னா, இதுவரை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அதனால்தான் எப்படிச் சொல்வது என்று தயங்குகிறேன்.

**அரசர்** : என்ன ஆனாலும் பரவாயில்லை. சொல்ல வந்த செய்தியைத் தயங்காமல் உடனே சொல்.

**காவலாளி** : மன்னா, அதுவந்து....அதுவந்து.... நம் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சிமணி....

**அரசர்** : என்ன? ஆராய்ச்சிமணியை யாராவது அடிக்கிறார்களா? இவ்வளவு மாதங்களாக யாருக்கும் எந்தக் குறையும் இல்லையென்று நினைத்தேனே. பரவாயில்லை. இதோ நானே வருகிறேன்.

(அரசர் அரண்மனை வாயிலுக்கு விரைய, அமைச்சர்களும் பின்தொடர்ந்து செல்கின்றனர்.)

**அரசர்** : ஐயகோ, என்ன ஆயிற்று? பசுவொன்று ஆராய்ச்சிமணியை அடித்துக் கொண்டிருக்கிறதே? என் ஆட்சியில் வாயில்லாத பசுவுக்குக் குறை நேர்ந்ததா? இதை நான் எங்ஙனம் பொறுத்துக்கொள்வேன்? அதன் கண்களில் வழியும் கண்ணீரைப் பாருங்கள். தாங்கமுடியாத துயரத்தில் அது துன்பப்படுவதுபோல் இருக்கிறதே? ஐந்தறிவு விலங்குகளின் துயர் நீக்க மறுத்தான் என்று இந்த வியனுலகம் என்னைப்பழிக்குமோ? இனி என் வாழ்நாளெல்லாம் பழிச்சொல்லைச் சுமந்து திரிவேனோ? எனக்கொன்றும் விளங்கவில்லையே, கதறும் அந்தப் பசுவின் கண்ணீரைத் துடைக்க இதோ புறப்பட்டான் இந்த

மன்னன் என்று பிறர் அறியட்டும். யாரங்கே? உடனே சென்று அந்தப் பசுவுக்கு ஏற்பட்ட இன்னலை அறிந்து வாருங்கள்.

**காவலாளிகள்** : உத்தரவு மன்னா. இதோ சென்று விரைவில் செய்தியுடன் மீள்கிறோம்.

(அரசனின் மகன், தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும்போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று, எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறக்கிறது. தன் கன்றைக் காணாது தேடியலைந்த பசு, அதன் இறந்த உடலைக் கண்டு கண்ணீர் விடுகிறது. அதன் ஆற்றொணாத் துயரே ஆராய்ச்சிமணி வடிவில் ஒலிக்கத் தொடங்கியது. இனி...)

## காட்சி – 3

**இடம்** : **அரசவை**

**காலம்** : காலை

**உறுப்பினர்கள்** : அரசர், அமைச்சர் பெருமக்கள்

**அமைச்சர்** : மன்னா, தங்கள் முடிவை அருள்கூர்ந்து மாற்றிக்கொள்ளுங்கள்.

**அரசர்** : என்ன சொல்கிறீர் அமைச்சரே? மண்ணுயிர் காக்கும் மன்னன், நீதி வழங்கும் நெறிமுறையாளன் என்று மக்கள் என்னைப் போற்றுகிறார்களே, அதற்கு இழுக்கு நேரிட ஒருபோதும் நான் அனுமதிக்க மாட்டேன். பசுவின் கதறலுக்குச் செவிசாய்க்காக் கொடியோன் என்னும் அவச்சொல்லுக்கு நான் ஆளாக விரும்பவில்லை. கண்ணுக்கு கண். பல்லுக்குப் பல் என்பதுதான் நான் எடுத்த முடிவு. இதில் எந்த மாற்றமும் இல்லை.

**அமைச்சர்** : மன்னா, சற்றுப் பொறுங்கள். உங்களுக்கு இருப்பதோ ஒரே ஒரு மகன். பசுவின் கன்றை அவன் வேண்டுமென்றே கொல்லவில்லையே, அவன் அறியாமல் செய்த தவறுதானே அது? அதற்காக நீங்கள் இப்படி ஒரு முடிவை எடுக்க வேண்டுமா?

**அரசர்** : ஆம். அதுதான் சரி. கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற அந்த பசுவின் முகம் உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா? அதன் கண்ணில் வழியும் கண்ணீர், "நீயும் ஒரு மன்னனா? உனக்கு மகன் எப்படியோ அப்படியே எனக்கு என் கன்று அல்லவா? அந்தச் சின்னஞ்சிறு கன்று என்ன பாவம் செய்தது? அதன் உயிரைப் போக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது? கன்றை இழந்து தவிக்கும் எனக்கு யார் ஆறுதல் தருவார்? இனி என் வாழ்நாளெல்லாம் வீண்தானோ" என்று என்னைக் கேட்பதுபோல் இருக்கிறதே, ஆகவே, நான் எடுத்த முடிவிலிருந்து சற்றும் பின்வாங்கமாட்டேன்.

**அமைச்சர்** : அரசே, மீண்டும் தங்களைப் பணிந்து வலியுறுத்துகிறேன். உங்கள் மகனைக் கொல்லும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

**அரசர்** : போதும், அமைச்சரே. நிறுத்துங்கள். இனி, யார் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். பசுவின் கன்றைத் துடிக்க, துடிக்கத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற என் மகனை அதே தேர்க்காலிலிட்டுக் கொல்லத்தான் போகிறேன். அந்தப் பசு அடைந்த துயரத்தை நானும் அடையவேண்டும். இதுதான் அந்தப்பசுவுக்கு நான் அளிக்கும் தீர்ப்பு. இந்தச் சோழப் பரம்பரை என்னால் தலைகுனியக் கூடாது. பல காலங்கள் தோன்றி மறைந்தாலும், நீதி தவறா மனுநீதிச் சோழன் என்று என்னைப் பலரும் நினைவுகூர்தல் வேண்டும். யாரங்கே? தேரைப் பூட்டி, வாயிலில் கொண்டு வந்து நிறுத்து. இழுத்து வா, என் மகனை. இப்போதே அவனைத் தேர்க்காலிலிட்டு நீதியை நிலைநாட்டுகிறேன்.

(தவறிழைத்தவன் தன் மகனே யானாலும், குற்றம் குற்றமே என்று எண்ணியதோடல்லாமல், அந்தத் தவற்றுக்குச் சரியான தண்டனையும் வழங்கிப் பசுவின் துயர் துடைத்து, வரலாற்றில் அழியா இடம்பெற்றான் மனுநீதிச் சோழன்.)

**(திரை விழுகிறது.)**



**வாங்க பேசலாம்**

- நீங்கள் மனுநீதிச் சோழனாக இருந்தால், பசுவின் துயரத்தை எப்படிப் போக்குவீர்கள்?



**சிந்திக்கலாமா!**

வீட்டிற்குப் போகும் வழியில் ஓணான் ஒன்றைச் சிறுவர்கள் சிலர் துன்புறுத்துகின்றனர். அவர்கள் செய்தது சரியா அந்தச் செயலை நீங்கள் எப்படித் தடுப்பீர்கள்?



Tamil 4th-std_Term2.indd 50 8/7/2019 6:03:40 PM